DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. STC.No.496/2023

Deposition of **DW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சக்திலட்சுமி | **Age** | : | 39 |
| **Father's / Husband Name** | : வேல்முருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : தேனி | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : தேனி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17 day July 2025**

புகார்தாரர் ஆஜர் இல்லை . கு.வி.மு.ச. பிரிவு 256 மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2) என்னிடம் காட்டப்படும் காசோலை என்னுடையதுதான் . கையொப்பம் என்னுடையது இல்லை. நான் தமிழில் கையொப்பம் செய்வேன் , ஆங்கிலத்தில் கையொப்பம் செய்ய மாட்டேன். எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் கையொப்பம் செய்து வாங்கிக் கொண்டேனா என்றால் நாங்கள் வீட்டில் இல்லாத போது வீட்டில் கொடுத்துவிட்டு சென்றார்கள் , நாங்கள் வாங்கவில்லை. அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல காசோலை மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல . நீதிமன்றத்தில் என் சார்பாக ஆஜராக வழக்கறிஞருக்கு வக்காலத்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . அதில் ஆங்கிலத்தில் கையப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3) காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் , நான் புகார்தாரிடம் ரூபாய் 5 லட்சம் பணம் பெற்றுக் கொண்டு அதனை திருப்பி செலுத்தாமல் காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு

ஆவணங்களை ரசீதுகளை எனது கணவர் கொடுத்தார் என்றால் சரிதான் . மேற்படி ஆவணங்கள் புகார்தாரரை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அனுப்பவில்லைவில்லை. பணத்தை வாங்கிக் கொண்டு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் நான் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய நபர் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

((ஒம்)திரு.M.நல்லகண்ணன்,B.Com.,B.L.,)

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**